ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

02.03.2016 - மலர் 13, இதழ் 01

## 13 ஆம் வருடத்தில் உங்கள் விஜய்

## பூமிக்கு அருகாமையில் பயணிக்கும் விண்கல்

யாழ்ப்பாண பொது நூலகம்



## ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் சிம்மாசனம்...





## அழியும் அபாயத்திலுள்ள இலங்கை நத்தை




## மோதல்களை தவிர்ப்போம்... பொறுமை காப்போம்...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜுவும் அவனது வீட்டாரும் அப்பிள் பறிக்கத் தோட்டத்திற்குச் சென்றனர். இரண்டு பெரிய கூடைகள் நிறைய அப்பிள்களைப் பறித்தனர். அன்றைய நாள் ராஜுவுக்கு மிகவும் குதூகலமான நாளாக இருந்தது. ஒரு கூடையிலிருந்த அப்பிள் பழம் ஒன்றில் இருந்து சிறிய புழுவொன்று வெளியே எட்டிப்பார்த்தது.



1. ராஜுவும் வீட்டாரும் எங்கு, எதற்காகச் சென்றனர்?


   ..............................................

2. எத்தனை கூடைகள் நிறைய அப்பிள்கள் பறிக்கப்பட்டன?

   ..............................................

3. ஒரு கூடையில் இருந்த அப்பிளில் இருந்து வெளியே எட்டிப்பார்த்தது எது?

   1. அணில்  2. புழு  3. தவளை






1. மரக்கிளைகளில் அமர்ந்திருப்பவை யாவை?

   ..............................................

2. இந்தப் பறவையினம் எந்த நேரத்தில் வெளியே சஞ்சரிக்கும்?

   ..............................................

3. குயில் - கூவும் என்பது போல இந்தப் பறவையினம் ஒலியெழுப்பும் விதம் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?

   ..............................................

4. இதனை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்?

   1. Bat  2. Pigeon  3. Owl




1. இந்தப் படத்திலுள்ளவர்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றனர்?

   ..............................................


2. நாய்க்குட்டியின் பெயர் என்ன?

   ..............................................

3. இவர்கள் புல்வெளியில் தரைவிரிப்பொன்றை விரித்துள்ளனர். இந்தக் கூற்று;

   1. சரியானது  2. பிழையானது

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.



-ஜீரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் வருடத்தில் விஜய்

வணக்கம்;

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆசிரியர் கடிதத்தின் ஊடாக உங்களை சந்திக்கின்றேன். 'விஜய்' பத்திரிகை 13 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்ற மகிழ்ச்சி ஒருபுறம்... இலக்கை நோக்கி முன்னேற்றம் கண்டுள்ளோம் என்ற நெகிழ்ச்சி இன்னொருபுறம்.

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட 'விஜய்' பத்திரிகை, இன்று பெரியவர்களும் விரும்பி வாசிக்கும் பத்திரிகையாக தனித்துவத்தைப் பெற்றுள்ளதை உணர முடிகின்றது. இத்தனை வருடங்களாக வாசகர்களாகிய உங்களுடனான அறிவுசார் பயணத்தில் நீண்டதோர் அனுபவத்தைப் பெற்றுள்ளோம். நமது ஆரம்பகால வாசகர்களாகிய பலர், தற்போது மாணவர் பருவத்தைத் தாண்டிய பின்னரும் தொடர்ந்தும் 'விஜய்' பத்திரிகையை

## அறிவும் ஒழுக்கமும் சார்ந்த சமூகமே நமது இலக்கு

வாசித்து வருவதை அறிய முடிகின்றது. அவ்வாறே, நமது அடுத்த தலைமுறைக்கும் 'விஜய்' பற்றி அறிமுகம் செய்வதையும் உணர முடிகின்றது. இதன்மூலம் நமது வாசகர் வட்டம் உறுதியாக இருப்பது நிரூபணமாகின்றது.

நமது இந்த பயணத்தில் பெற்றோர், ஆசிரியர்மார், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் பங்களிப்பை அன்றும் இன்றும் எப்போதும் நன்றியுணர்வுடன் நினைவுகூருகின்றோம்.

பத்திரிகை என்பது அறிமுகமாவதில் ஆச்சரியம் இல்லை. ஆனால், அதன் இருப்பை தக்கவைத்துக் கொள்வதென்பது லேசுப்பட்ட காரியமன்று. அந்த வகையில், தமிழ் பேசும் மாணவர்களுக்கென இலங்கையில் வெளியான முதலாவது மாணவர் பத்திரிகையான 'விஜய்' பத்திரிகை, தனது இருப்பை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டுள்ளமை வாசகர்களின் ஆதரவை, நம்பிக்கையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

மாணவ சமூகத்தை வகுப்பு அடிப்படையிலோ, பொது அடிப்படையிலோ வேறுபடுத்திப் பார்க்காமல் அனைவரையும் ஒரே களத்தில் வைத்து அறிவுசார் அம்சங்களை பகிர்வதே 'விஜய்'யின் தனித்துவம் என்பதை அறிவீர்கள்.

இன்றைய சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அறிவீர்கள். அந்த மாற்றங்களுக்கு ஏற்ப நல்லவற்றிற்கு இசைவாக்கம் அடைவதும்,



வேண்டாதவற்றை தவிர்ப்பதுமே இன்றைய தேவையாகும். இதன் ஓர் அடையாளமாகத்தான் மாணவ சமூகத்திற்கு கல்விசார்ந்த விடயங்கள் மட்டுமன்றி, சமூகத்தில் நல்லதொரு பிரஜையாக மிளிர்வதற்கான ஒழுக்கம் சார்ந்த அம்சங்களையும் சேர்த்தே வழங்கி வருகின்றோம். பணம் பண்ணுவதல்ல கனம் பண்ணக்கூடிய ஒரு சமூகம்தான் நமக்குத் தேவையாகின்றது.

அறிவும் பரிவும் சேரும் இடத்தில்தான் முழுமை இருக்கும். அந்த முழுமை கொண்ட வாழ்வே செழுமை தரும். அந்த செழுமைமிகு வாழ்க்கைக்கு உங்களை அழைத்துச் செல்லும் பணியே 'விஜய்' யின் இலக்காகும். வாருங்கள் இலக்கைத் தொடுவோம்...


தொடர்ந்தும் உங்கள் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம்.

'விஜய்' வாசிப்பதில் நீங்கள் பெருமை கொள்வது போலவே, உங்களை வாசகர்களாகக் கொண்டமைக்காக 'விஜய்'யும் பெருமை கொள்கின்றது. இந்த சாதனைப் பயணத்தில் உண்மையான சாதனையாளர்கள் நீங்களேதான். மீண்டும் சந்திப்போம்....

எப்போதும் உங்களுடன்
அன்புடன்
ஆசிரியர்
(வி.ரெட்லி ஹெரிசன்)

## குளிர்ச்சியும் வறட்சியும் நிலவும்


# செவ்வாய் கிரகம்



முன்னொரு காலத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற பூமியைப் போன்றதொரு கிரகமாக இருந்த செவ்வாய் கிரகம், குளிர்ச்சியும் வறட்சியும் நிறைந்த பாலைவனமாக மாறியது எவ்வாறு? என்பதை அமெரிக்காவின் நாஸா நிறுவன விஞ்ஞானிகள் தற்போது கண்டறிந்துள்ளனர். அதன்படி, செவ்வாய் கிரகத்தின் இன்றைய நிலைக்குக் காரணம், அங்கு வீசிய சூரியப் புயல் ஆகும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையை சென்றடைந்த 'மாவன்' (MAVAN) எனும் ஆய்வுக்கலத்தின் மூலமே இத்தகவல் பெறப்பட்டுள்ளது. சூரியப் புயலுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய காந்தப் புலம் செவ்வாய் கிரகத்தில் இல்லை. இதனால், சூரியப் புயலின்போது சூரியனில் இருந்து வெளிப்படும் சிக்கலான காந்தத் துகள்களினாலும் புறஊதாக் கதிர்களினாலும் செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலம் பாதிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் விழுகின்ற சூரியக் கதிர்களினதும் அண்டக் கதிர்களினதும் மூலாதாரங்களைக் கண்டுபிடிப்பதற்கும், குறித்த கதிர்கள் செவ்வாயின் மேற்பரப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை ஆய்வு செய்வதற்காகவுமே மாவன் ஆய்வுக்கலம் அனுப்பப்பட்டுள்ளது. (-அ)



விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹூணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவத்தைக் கண்டு இகழக்கூடாது



ஒரு சிறிய தோட்டத்தில் ஒரு எறும்புப் புற்று இருந்தது. அந்த எறும்புப் புற்றிலிருந்த எறும்புகள் உணவினைத் தேடி பக்கத்திலிருந்த ஒரு பெரிய செடியின்மீது ஏறிக்கொண்டு இருந்தன. அந்த செடியின் ஒரு கிளையில் ஒரு பஞ்சுக் கூட்டிற்குள் ஒரு புழுவொன்று மெல்ல ஆடிக் கொண்டு இருந்தது. அது பார்ப்பதற்கு அருவருப்பாக இருந்தது.

அந்த எறும்புக் கூட்டத்தினரில் ஒரு தீய குணம் கொண்ட எறும்பு செடியில் வாழ்ந்த அந்த புழுவைப் பார்த்தது. உடனே, ``சிறிய புழுவே! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் பாவமாக உள்ளது. எங்களைப் பார். எத்தனை உயரமான மரத்தில் எத்தனை எளிதாக ஏறிச் செல்கிறோம். ஆனால், நீயோ ஒருபோதும் உயரமான மரத்தில் ஏற முடியாது பாவம். உங்களது பிறவி அப்படி! என்ன செய்வது`` என்று எறும்பு கேலியாகச் சிரித்தது.

புழு அமைதியாகப் பதில் ஏதும் கூறாமல் இருந்தது. பின் ஏனைய எறும்புகள் அந்தப் புழுவை கிண்டல் செய்தபடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டன. சிறிது நாட்கள் ஆனது, ஒருநாள் அதே எறும்புகள் மீண்டும் அந்த செடியின் மேலே ஏறிச் சென்றன. அப்போது செடியின் கிளையில் வண்ணத்திப் பூச்சியின் கூடு மட்டும் இருந்தது. அந்தப் புழுவைக் காணவே இல்லை. உடனே அந்த எறும்புகள், ``பாவம் அந்தப் புழு கூட்டிலேயே தனது வாழ்வை முடித்துக்கொண்டது போலும்`` என்று கூறிக் கேலியாகச் சிரித்தன. அப்போது எறும்புகளின் தலைக்கு மேலிருந்து ``எறும்பு நண்பர்களே`` என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. எறும்புகள் மேலே பார்த்தன. வானத்தில் மிக அழகிய வண்ணத்துப் பூச்சி ஒன்று சிறகடித்தபடி நின்றது.

அந்தப் வண்ணத்துப் பூச்சி எறும்புகளை பார்த்து, ``நண்பர்களே! உங்களால் வெறும் மரத்தில் மட்டும்தான் ஏற முடியும். ஆனால், என்னால் அதைவிட மிக உயரமான மலைக்கு மேலும் வானம் வரையிலும் கூட பறக்க முடியும்`` என்று கூறியது.

``மேலும் இதற்காக உங்களை இழிவானவர்கள் என்று நான் கூறவில்லை. யார் யாருக்கு என்ன திறமை இருக்கின்றதோ அதனைக் கொண்டு வாழவேண்டும். இதனால் நமது திறமைகளுக்காக நாம் கர்வப்பட்டு பிறரை இகழக்கூடாது. அதைப் புரிந்துகொள்ளுங்கள்`` என்று அறிவுரை கூறியது. பாவம் எறும்புகள் தலை கவிழ்ந்து சென்றன.



# அறிவாளி!

விஜயபுரத்தை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுடைய அரசவையில் தகுதிவாய்ந்த மந்திரி பதவிக்கு இளைஞன் ஒருவனை நியமிக்க வேண்டும் என்று மன்னன் விரும்பினான். அதற்காக மக்களுக்கு ஓர் அறிவிப்பை விடுத்தான்.

நாட்டில் அறிவும், திறமையும் உள்ள இளைஞர்களுக்காக ஒரு போட்டி நடைபெறுகிறது. தங்கள் அறிவில் நம்பிக் கையுள்ளவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றால் அதற்குத் தக்க பலன்களை அடையலாம்" என அறிவித்தார். மறுநாள் ஆர்வம் மிக்க இளைஞர்கள் பலர் அரசவையில் ஒன்று கூடினர். அப்போது போட்டிக்கு வந்த போட்டியாளர்களிடம் மன்னன் பேசினான்.

"அன்பார்ந்த இளைஞர் களே! இதோ எனக்கு அருகில் நிற்கும் இந்த இரண்டு வீரர்களையும் பாருங்கள். இவர்களில் ஒருவன் உண்மையான வீரன்; மற்றொருவன் அவனைப் போன்ற போலி. நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் இதில் உண்மையான வீரன் யார்? போலி வீரன் யார்?" என்று கண்டுபிடிக்க வேண்டியதே! "இதற்காக நீங்கள் ஒரு அடி இடைவெளியில் நின்றுதான் பார்க்க வேண்டும். நீ ங்கள் உண்மையான வீரனைச் சோதிப்பதாகக் கூறிக்கொண்டு அவர்களைத் தொட முயற்சிப்பதோ, பொருட்களைத் தூக்கி எறிந்து காயமுண்டாக்கும்படி செய்வதோ கூடாது.

ஆனால், உங்களுக்கென்று ஒரு சலுகை தரப்பட்டுள்ளது. உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்வதன் பொருட்டு வீரர்களைத் தொடாமல் ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு அறிய முயற்சிக்கலாம். அவ்வளவு தான் நிபந்தனைகள்!" என்றார். இருவரும் ஒரே நிறத்தில், உடைகள் அணிந்திருந்தனர் ஒரே மாதிரி ஆயுதங்களை ஏந்தி இருந்தனர். அவர்களின் கண் கள் எல்லாமே ஒன்றாகவே இருந்தன. இந்த வீரர்களை பார்த்த சிலர் கைதட்டி ஓசை எழுப்பிப் பார்த்தனர். சிலர் வீரன் முன்னால் வந்து நின்று அவனை மிரட்டும் தொனியில் குரல் எழுப்பினர். சிலர் நகைச்சுவையான விடயங்களைக் கூறிச் சிரிக்க வைக்க முயன்றனர். ஆனால், ஒருவருக்கும் உண்மையைக் கண்டறியும் சக்தி இல்லை.

கடைசியாக ஓர் இளைஞன் முன் வந்தான். அவன் நீண்ட நேரம் வீரர்கள் இருவரையும் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தான், தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சிறிது நேரம்கூட வீணாக்காமல் அவன் மன்னனிடம் சென்றான்.

"மன்னர் அவர்களே, எனக்கு ஒரு தீப்பந்தம் தந்து உதவ வேண்டும்!" என்றான். அதற்கு மன்னர் சம்மதித்தார். சிறிது நேரத்தில், அவனுக்கு ஒரு தீப்பந்தம் கொடுக்கப் பட்டது. அவன் அந்தத் தீப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த வீரர்களின் வலது பக்கத்துக் குச் சென்றான். வீரர்களுக்கு ஓரடி இடைவெளியில் நின்றுகொண்டான். பின் தனக்கு வலது பக்கம் உள்ள வீரனின் முன் அந்தத் தீப்பந்தத்தை நீட்டிப் பிடித்தான். அரண்மனை எங்கும் அமைதி சூழ்ந்தது.

சிறிது நேரத்தில் அவன் நீட்டிய பக்கத்திலி ருந்து வீரன் மெல்ல மெல்லக் கரைந்து



உருக ஆரம்பித்தான். அதன்பின் இளைஞன் தீப்பந்தத்தை அணைத்து விட்டு, "அரசே, நான் உருக்கிய வீரன் மெழுகினால் செய்யப்பட்ட பொம்மை. அருகில் எனக்கு இடது கைப்பக்கமாக நிற்கும் வீரன் உண்மையான மனிதன்!" என்று கூறினான். "சபாஷ்!" என்று பாராட்டினான் அரசன்.

"உன்னுடைய உற்று நோக்கும் திறன், சிந்திக்கும் தன்மை, நீ செயல்பட்ட விதம் ஆகியவை உன்னை அறிவாளி என்று ஏற்க வைத்துவிட்டது. நீயே இந்நாட்டு மந்திரி பதவியை நிரப்ப வந்த அறிவாளி, வாழ்க நீ!" என்றான் மன்னன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் உறைந்த தேநீர் கூர்கள்

நத்தார் காலத்தில் பிடிக்கப்பட்ட புகைப்படமே இது. இங்கு பனிக் கூர்கள்போல் தோற்றமளிப்பது ஆவி பறக்கும் கொதிக்கும் தேநீரை வான் நோக்கி வீசியபோது, அவை கடுங்குளிரின் காரணமாக வானில் பனிக்கட்டிக் கூர்களாக மாறிய காட்சியாகும். புகைப்படக் கலைஞரான மிச்செல் எஸ்.டேவிஸ் என்பவரால் இது எடுக்கப்பட்டது. இதனை சமூக வலைத்தளங்களில் ஆயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.



## வெள்ளை ஒட்டகச் சிவிங்கி



வெள்ளை நிறமாகக் காட்சியளிக்கும் இந்த ஒட்டகச் சிவிங்கியை கலாநிதி டெரெக் லீ எனும் சூழலியாலாளரே முதன்முதலாக கண்டுபிடித்தார். இந்த ஒட்டகச் சிவிங்கிக் குட்டியின் பெயர் ஓமோ. இதன் வயது 15 மாதங்கள் மாத்திரமே. இந்த சிவிங்கி 'லியூசிலம்' எனும் ஓர் அபூர்வ நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஒட்டகச் சிவிங்கி குட்டி பிறந்த ஒரு வருட காலம் அதற்கு மிக ஆபத்தான காலமாகும். ஏனெனில், இவை சிங்கங்கள், புலிகள் போன்ற மாமிச உண்ணிகளிடம் இரையாவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும்.

அத்தோடு, இந்த ஒட்டகச் சிவிங்கி வெள்ளை நிறமாக இருப்பதால் இதனை மாமிச உண்ணிகள் இதனை இலகுவாக வேட்டையாடும் என்பதால் இந்த ஒட்டகச் சிவிங்கிக் குட்டி தற்போது டரன்ஜியர் தேசிய வனப் பூங்காவால் வளர்க்கப்படுகின்றது.

## ஆழ்கடலில் இருக்கும் ஊதா காலுறைகள்

படத்தில் காட்டப்பட்டுள்ளவை சமுத்திரத்தின் ஆழமான பகுதியில் வாழும் ஊதா நிறத்தையுடைய காலுறையைப் போன்ற ஒருவகை விலங்கினமாகும். இந்த வகை விலங்கினத்தினை சுவீடன் நாட்டின் கரையோரத்தில் முதன்முதலாக கண்டுபிடித்தனர். இந்த அபூர்வமான விலங்கினத்திற்கு மூளையோ, கண்களோ, குடல்களோ இல்லை. இவ் விலங்கினம்



உணவு எடுப்பதோ, ஒரு துவாரத்தின் ஊடாக என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறிது நேரத்தின் பின் அதே துவாரத்தின் ஊடாகவே தனது கழிவுகளையும் அகற்றுகின்றது. இதனால், விஞ்ஞானிகள் இது ஒரு தட்டைப் புழு வகையைச் சேர்ந்தது என்று தெரிவித்துள்ளனர்.

## அதிகம் சாப்பிடும் திமிங்கிலம்



யானையை விட அதிகம் சாப்பிடக்கூடிய விலங்கு எது? நீலத் திமிங்கிலம் தான். இவை பல கெலன்களுக்கு கடல் நீரினை உள்வாங்கி அதிலுள்ள உணவைத் தவிர நீரினை வெளியேற்றும். இவ்வாறு இவை ஒரு நாளைக்கு 2 ஆயிரம் கிலோ உணவினை உள்ளெடுக்கும்.


'விஜய்' பத்திரிகையை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள

| | 1 வருடத்திற்கு | 6 மாதங்களுக்கு |
|---|---|---|
| கொழும்பு | ரூ 780/= | ரூ 390/= |
| கொழும்புக்கு வெளியே (தபாலில்) | ரூ 1560/= | ரூ 780/= |

கட்டணம் செலுத்தும் முறை:

- நேரடியாக செலுத்த முகவரி:- Subscription Division, Wijeya Newspapers Ltd. No-08, Hunupitiya Cross Rd, Colombo-02
- காசுக்கட்டளை (Money Order):- பெறுபவர் பெயருக்கு Slave island post office என குறிப்பிட்டு குறித்த காசுக்கட்டளை சிட்டையை பதிவுத் தபாலில் அனுப்பவும்.
- காசோலை (check):- Wijeya Newspapers என்ற பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: (பதிவுத் தபாலில்) - Subscription Manager, Tamil Vijei No-08, Hunupitiya Cross Rd, Colombo-02,

தொ.பே.இல: - 011-2307789, 0773710291

வெளிநாட்டிற்கு -Foreign (1 வருடத்திற்கு)

| Countries | Amount (Sri lankan Rupees) |
|---|---|
| India Malaysia, Singapore, | 4940.00 |
| Oman, Thailand Saudi Arabia, Kuwait, Bahrain, U.A.E | 5200.00 |
| Brunei, Qatar Australia, Libiya, | 5460.00 |
| Malta, Sweden Britain, Denmark, France, Germany Italy, Netherland, | 6916.00 |
| Norway | 8060.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளும் நம்பிக்கையீனமும் பெருகும்போது மோதல்கள் நிகழ்கின்றன. இதன் காரணமாக சமாதானம், அமைதி என்பன பாதிக்கப்படுகின்றன. எனவே, மோதல்களைத் தவிர்த்து வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும். அவ்வாறு வாழப் பழகுவதற்கு நாம் முதலில் மோதல்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு தவிர்த்துக்கொள்வது பற்றியும் அறிந்துகொள்வது அவசியமாகும்.



# மோதல்க

## மோதல் என்றால் என்ன?

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் அமைதியையும் நட்புறவினையும் பாதிக்கும் விடயமாக மோதலைக் குறிப்பிட முடியும். இதன்போது, நட்புறவு பாதிக்கப்படுகின்றது. மோசமான வார்த்தைப் பிரயோகங்களும் தாக்குதல்களும் இடம்பெறுகின்றது. அதுமட்டுமன்றி, பழிவாங்கும் உணர்வும் ஏற்படுகின்றது. சில சமயங்களில் உயிரிழப்புகளும் ஏற்படக்கூடும். மோதல்கள் நிகழும் இடத்தில் சூழல் மகிழ்வற்றதாகவும் அச்சம் நிறைந்ததாகவும் காணப்படும்.

## மோதல்களை ஏற்படுத்தும் காரணிகள்

ஜொஹான்கெல்ட்டுன் என்பவர் மோதல்கள் ஏற்படுவதற்கான காரணிகளை முக்கோணி ஒன்றின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

★எண்ணங்கள்
★நடத்தைகள்
★முரண்பாடுகள்

அவரின் கருத்தின்படி மேலே கூறப்பட்டுள்ள காரணிகளே, மோதல்களுக்கு காரணமாகின்றன.

## எண்ணங்கள்

அச்சம், சந்தேகம், நம்பிக்கையீனம், கோபம் ஆகிய தவறான எண்ணங்களே மோதல்கள் ஏற்பட பிரதான காரணமாகும்.

## பரஸ்பர முரண்பாடுகள்

சமூக தராதரங்களில் வேறுபாட்டின் காரணமாக, கருத்துக்களில் இணக்கப்பாடு ஏற்படாதபோது முரண்பாடுகள் தோன்றலாம். இதன்போதும் மோதல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## நடத்தைகள்

மாணவ செயற்பாட்டின் போது, ஒத்துழைப்பு வழங்காமையினால் மோதல்கள் ஏற்படும்.

## பாடசாலையில் ஏற்படும் மோதல்கள்

பாடசாலையில் மாணவர்களுக்கும்




இதர மாணவர்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்கள், மாணவர், ஆசிரியர் மோதல்கள், மாணவர்களுக்கும் இதர தரப்பினர்களுக்கும் இடையிலான மோதல்கள் என்று வகைப்படுத்தப்படலாம். இதன் காரணமாக, சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டு விடுகின்றன. அதுமட்டுமன்றி, மாணவர்கள் மற்றும் மாணவிகள் மத்தியில் எழும் சிந்தனை ரீதியிலான மோதல்கள் பற்றி பெரும்பாலும் அறியக் கிடைக்கின்றது.

எனினும், பாடசாலை காலத்தில் மோதல்கள் ஏற்படுவது கவலைக்குரியதாகும். இதனால், நண்பர்கள் நண்பிகளுடன் மகிழ்ச்சியாக கழிக்கும் காலத்தில் ஏற்படும் இவ்வாறான நிகழ்வுகள் எதிர்ப்புணர்வினையும் தனிமையையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால், பல மகிழ்வான விடயங்களையும் இழக்க நேரிடும்.

## மோதல்களின் பாதிப்புகள்

★ பாடசாலையின் மதிப்புக்கும், சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படல்.

★ அன்றாடக் கல்விப் பணிகளை முன்னெடுப்பதற்கு இடையூறுகள் ஏற்படல்.

★ மோதல்களில் ஈடுபடும் மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையீனம் உருவாகல்; அவர்கள்மீது ஆசிரியரின் கவனமும் குறைவடைதல்.

★ நண்பர்கள் எதிரிகளாக மாற்றமடைதல், பழிவாங்கும் உணர்ச்சி ஏற்படல்.

★ பாடசாலையின் கூட்டு செயற்பாடுகள் பாதிக்கப்படல்.




## மோதல்களை தீர்ப்பது எவ்வாறு?

மோதல்கள் அற்ற சுற்றாடலில் அமைதி நிலவும். அந்தவகையில், மகிழ்ச்சியுடனும் ஒத்துழைப்புடனும் காலத்தினைப் போக்குவதற்கு மோதல்கள் அற்ற சுற்றாடலுக்காக நாம் சில பயிற்சிகளைப் பெற வேண்டும்.

## உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல்

மகிழ்வு, சோகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ள் எமக்கு வேண்டாம்!



இரக்கம், அச்சம், பழிவாங்கும் உணர்வு ஆகியவற்றை உணர்ச்சிகள் என்கின்றோம். இதனால் சிலர் அதிக மகிழ்ச்சியின் போது உரக்கச் சிரித்தல், ஆடுதல், குதித்தல் ஆகிய செயற்பாடுகளை வெளிப்படுத்துவர். சிலர் அதிக கோபத்தின்போது, உரக்கப் பேசுதல், திட்டுதல், தாக்குதல்களை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகளை வெளிப்படுத்துவர். பெரும்பாலும் மோதல்களுக்கு காரணம் கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளாகும். இதனால், உணர்ச்சிகள் எழும்போது மன அமைதியுடன் செயற்பட முயலுதல் வேண்டும்.



## பொறுமை

பொறுமை என்பது சுயமாக நாம் முன்னேற்றிக் கொள்ள வேண்டிய ஒரு மனிதப் பண்பாகும். எமது பலவீனம் காரணமாகவே பாடசாலை சுற்றாடலில் மதிப்பின்மை, தண்டனை பெறுதல் என்பனவற்றை நாம் எதிர்கொள்ளநேரிடுகின்றது. இவ்வாறான சிக்கல்களை அமைதியான மனதுடன் எதிர்கொள்வதனாலேயே நாம் வெற்றியடைய முடியும்.

**பொறுமை என்பது சுயமாக நாம் முன்னேற்றிக்கொள்ள வேண்டிய ஒரு மனிதப் பண்பாகும். எமது பலவீனம் காரணமாகவே பாடசாலை சுற்றாடலில் மதிப்பின்மை, தண்டனை பெறுதல் என்பனவற்றை நாம் எதிர்கொள்ள நேரிடுகின்றது.**

## மதித்தல்

ஆசிரியர்களின் பெற்றோர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தல், சிறந்த செயல்களை மதித்தல் ஆகியன மற்றவர்களின் பாராட்டுகளுக்குரிய நிகழ்வாக எப்பொழுதும் உள்ளது. இதனால், எம்மையும் மற்றவர் மதிக்கும் நிலைமை ஏற்படும். மாறாக மற்றவர்களை விமர்சனம் செய்தல், தரக்குறைவாகப் பேசுதல், என்பன மோதல்கள் உருவாகும் சூழலை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான செயல்கள் மற்றவர்கள் மத்தியில் நம்மைப்பற்றிய மோசமான அபிப்பிராயத்தினை உருவாகி விடுகின்றது.

## பாராட்டுதல்

பலதரப்பட்ட ஆற்றல்கள் கொண்ட மாணவர்கள் நம் மத்தியில் உள்ளனர். இதனால் அவர்களை நாம் உண்மையாகப் பாராட்ட தவறக்கூடாது. எனவே ஒருவரின் திறமையை அறிந்து நாம் பேச வேண்டும். அதனை தவிர்த்து தேவையற்ற முறையில் குறைகளை சுட்டிக் காட்டுவது வீண் மோதல்களுக்கே வழிவகுக்கும்.

## மன்னிப்பளித்தல்

மன்னிப்பளித்தல் மோதல்களைத் தவிர்ப்பதற்கு உள்ள ஒரு சிறந்த வழிமுறையாகும். பிறர் செய்யும் தவறுகளை திருத்திக்கொள்வதற்கு வழங்கப்படும் ஒரு சந்தர்ப்பமே மன்னிப்பளித்தல் ஆகும். தவறுகளை சுட்டிக்காட்டி மனம் நோகச் செய்வதனை விட மன்னிப்பளிப்பது மோதல்களுக்கு வழிவகுக்காத செயற்பாடு எனலாம்.




## இரக்கம் காட்டுதல்

பாடசாலை சுற்றாடலில் பலதரப்பட்ட குழப்பங்கள், மோதல்கள் இடம்பெறுவது பொதுவான விடயமாகும். இவ்வாறான சூழலில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கி. புரிந்துணர்வின் மூலம் இரக்க உணர்வினை வளர்த்துக்கொள்ள முடியும். இதனால் மோதல்களை தடுக்க முடியும்

## நன்றியுணர்வு

காலையில் பாடசாலை ஆரம்பம் முதல் முடிவு வரை ஆசிரியர்கள், பாடசாலைக் காவலாளி, சிற்றூழியர்கள், நண்பர்கள், நண்பிகள் என்று பலர் எமக்கு உதவியாக இருக்கின்றனர். அந்தவகையில் ஒருவர் தனியாகச் செய்ய முடியாத பல வேலைகள் பாடசாலை சூழலில் காணப்படுகின்றது. இதனால், எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டியது கடமையாகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ..................................................

01) இங்குள்ள பாடலை வாசித்து, கீழ் காணும் வினாக்களுக்கு விடை தருக.

கறுத்த வானம் இருண்டிடும்
காற்றுச் சுழன்று அடித்திடும்
ஆற்றில் வெள்ளம் பெருகிடும்
அணைகள் நிரம்பிப் பெருகிடும்
மின்னல் இடியும் தோன்றிடும்
இன்னல் யாவும் தந்திடும்

01. இப்பாடலில் கூறப்படும் காட்சி யாது?

..........................................................................

02. ஆற்றில் ஏன் வெள்ளம் பெருகியது?

..........................................................................

03. காற்று எவ்வாறு வீசியது?

..........................................................................

04. 'இன்னல்' என்ற சொல்லுக்கு ஒத்தகருத்துச் சொல் ஒன்று தருக.

..........................................................................

05. பாடலிலுள்ள பெயர் அடைமொழி யாது?

..........................................................................

02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக்குக.

01. சாப்பிட்டு/ புல்/ மான்கள்/ வாழ்கின்றன/ தழைகளைச்/ மற்றும்

..........................................................................

02. எலியைப்/ இருந்த/ மேலே/ பானை/ ஓடியது/ பூனை/ பிடிக்க

..........................................................................

03) பின்வரும் தொடர்களின் உட்கருத்தை எழுதுங்கள்.

01. நாக்குப் புரளுதல் - ..........................................................

02. வயிற்றெரிச்சல் - ..........................................................

04) தமிழ்க்கருத்தை எழுதுக.

01. I want to play cricket - ..........................................................

02. I will bring tomato - ..........................................................

05) பின்வருவனவற்றின் தமிழ்க் கருத்தை எழுதுக.

01. மம சிந்து அஹனவா - ..........................................................

02. கிரி சுது பாட்டய் - ..........................................................

06) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

01. பொருள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச இலச்சினை யாது?

1. ISO   2. SLS   3. ISBN   4. SSO




02. இலங்கைப் பிரஜை ஒருவர் தனது வதிவிடத்தை உறுதிப்படுத்த முதலில் செல்ல வேண்டிய இடம்;

1. நீதிமன்றம்   2. பொலிஸ்
3. பிரதேச செயலகம்   4. கிராம சேவகர்

03. மதத்துடன் தொடர்புடைய மலை எது?

1. பீதுருதாலகால மலை
2. சிவனொளிபாத மலை
3. இமயமலை
4. கிரிகல்பொத்த மலை

04. மனிதருக்கு பொருளாதாரத்தை தேடித் தரும் பிராணி;

1. வண்ணத்துப்பூச்சி   2. குளவி
3. தேனீ   4. தும்பி

05. நுளம்பு கடிப்பதைத் தடுக்கக்கூடிய எண்ணெய் யாது?

1. தேங்காய் எண்ணெய்   2. புல் எண்ணெய்
3. நல்லெண்ணெய்   4. மண்ணெண்ணெய்

06. குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக கிராம மட்டங்களில் செயற்படுத்தப்படும் திட்டம்;

1. நீர்ப்பாசனம்   2. கால்வாய்
3. குழாய்க் கிணறு   4. நீர்த்தடாகம்

07. விரைவாக முளைக்கும் வித்து எது?

1. தேங்காய்   2. பனை   3. கடுகு   4. புளி

08. நீரில் கரையக்கூடிய பொருள் எது?

1. மண்ணெண்ணெய்   2. தேங்காய் எண்ணெய்
3. மெழுகு   4. கற்கண்டு

09. தரிப்பிடங்களைச் சுற்றி ஓடும் விளையாட்டு எது?

1. கிரிக்கெட்   2. கிளித்தட்டு   3. எல்லே   4. பூப்பந்து

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(பெப்ரவரி 24 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 04) 1 | 07) 2 | 10) 2 |
| 02) 3 | 05) 2 | 08) 1 | 11) 2 |
| 03) 1 | 06) 1 | 09) 3 | 12) 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம் - II

# வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகள்





சிறுவர் நிகழ்ச்சிகளுக்கு வானொலியில் தனி இடம் உள்ளது. சிறுவர் நிகழ்ச்சிகளை தயாரிப்பதென்பது ஒரு தனிக் கலையாகும். அதாவது, சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை தயாரிக்கும்போது, உளவியல் ரீதியிலான அணுகு முறைகள் அவசியமாகும். பிரதியாக்கம் செய்பவராகட்டும், அறிவிப்பு செய்பவராகட்டும் இவர்களுக்கு சிறுவர் மனங்களை புரிந்துகொள்ளும் பக்குவம் இருந்தாக வேண்டும். அப்போதுதான் அவர்கள் கூறுவதை சிறுவர்கள் செவி மடுப்பார்கள். ஒரு பிடிப்பு ஏற்படும். அதில்தான் நிகழ்ச்சியின் வெற்றி, பயன் தங்கியுள்ளது.

குறிப்பாக, சிறுவர் நிகழ்ச்சியை தயாரிப்பவர்கள் தாமும் சிறுவர்களின் நிலைக்கு தம்மை கீழிறக்கிக்கொள்ள வேண்டும். தாமும் ஒரு சிறு பிள்ளை



என்ற பாங்கில் நடந்து கொள்ள வேண்டும். அறிவிப்பாளரின் பேச்சும்கூட சிறுவர்களின் பாணியிலேயே இருத்தல் வேண்டும்.

சிறுவர் நிகழ்ச்சி என்பது வெறுமனே பொழுது போக்கு நிகழ்ச்சியாக அமையும் ஒன்றல்ல. சிறுவர் நிகழ்ச்சிகள் வானொலி அறிவிப்பாளர்களை உருவாக்கும் பயிற்சி மேடையாக அமைவதுண்டு. அதுபோல் சிறுவர் படைப்பாளிகளை இனங்காணும் ஒரு களமாகவும் அமைவதுண்டு. வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பலர்



கலைஞர்களாகவும், அறிவிப்பாளர்களாகவும், மிளிர்ந்துள்ளதைக் காணலாம். இதுவே, சிறுவர் நிகழ்ச்சிகளில் உள்ள ஆழத்தை உணர்த்துவதாக உள்ளது.

சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான பிரதிகளை தயாரிக்கும்போது சிறுவர்களுக்கு புரியும் விதமாக மொழிநடையில் அவை அமைக்கப்படல் வேண்டும். அதேபோல் முன்வைக்கப்படும் விடயங்களும் சிறுவர்களின் உலகை வலம் வருவனவாக இருத்தல் வேண்டும். கடினமான வார்த்தைப் பிரயோகங்கள், கனமான விடயங்கள், போன்ற வற்றை சிறுவர்களின் மனதில் திணிப்பது போன்றதாக நிகழ்ச்சிகள் இருத்தல் கூடாது. மேலும், சிறுவர் நிகழ்ச்சிகள் இரண்டு விதமாக அமைவ துண்டு. ஒன்று: வானொலி நிலையத்தாரின் படைப்பில் வழங்கப்படும் நிகழ்ச்சிகள். இரண்டு: சிறுவர்களை நேரடியாக கலையகத்திற்கு அழைத்து நடத்தப்படும் நிகழ்ச்சிகள் இதில், முதலாவது விடயமான வானொலி நிலையத்தார் நடத்தும் நிகழ்ச்சி எனும்போது தகவல்கள், விவரங்கள், அறிவுசார் அம்சங்கள், பொது அறிவு விடயங்கள் என இன்னோரன்ன விதமாக அவை அமைவதுண்டு.

இரண்டாவது வகையான சிறுவர்களை நேரில் அழைத்து கலந்துகொள்ளச் செய்யும் நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் தமது குரலிலேயே தத்தமது திறமைகளை வெளிக்காட்டக்கூடியதாக இருப்பதுடன், அறிவிப்பாளரும் சிறுவர்கள் பாணியிலேயே பேசி நிகழ்ச்சியை உயிரோட்டமாக்க முடியும். இவ்வாறான நிகழ்ச்சிகள் சிறுவர்கள் மத்தியில் உள்ள சபைக்கூச்சத்தைப் போக்குவதுடன், திறமைகளை வெளிக்காட்டி ஆர்வத்தை ஊட்டுவதுடன், தம்மிடம் உள்ள தனித்துவத்தைக் காட்டக் கூடிய மேடையாக அவை அமைவதுண்டு.

(தொடரும்)

- ரிஷபன்

## கியூரியோசிட்டி



செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக அனுப்பப்பட்ட சிறிய கார் போன்ற ஆய்வு விண்ணோடம் தான் கியூரியோசிட்டி (Curiosity) ஆகும். இந்த கியூரியோசிட்டி ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அன்று தனக்குத்தானே 'Happy Birthday' கூறிக்கொள்ளும். ஏனெனில், அன்றுதான் கியூரியோசிட்டி வெற்றிகரமாக செவ்வாய்க்கு சென்றடைந்த நாளாகும்.

இதனை ஞாபகப்படுத்தும் முகமாக விஞ்ஞானிகளால் மேற்படி 'கியூரியோசிட்டி' யில் பதிவு செய்து அனுப்பப்பட்ட ஒலிக்கீற்றே இவ்வாறு சுயமாக செயற்படுகின்றது.

## ஹோண்டாவின் ரைடர்



ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு உள்ளகத்தில் அடிக்கடி பயணிப்பதற்கு இலகு கண்டுபிடிப்பொன்றை ஹோண்டா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. 'ரைடர்' எனும் கருவியே அந்தக் கண்டுபிடிப்பாகும். இந்த ரைடர் மேல் ஒருவர் மட்டும் உட்கார்ந்து கொண்டு அங்கும் இங்கும் பயணிக்க முடியும். மேலும் இந்த ரைடரை அலுவலக வேலைகளில், மற்றும் உள்ளக அரங்குகளில் நடக்கும் களியாட்டங்களுக்கு பயன்படுத்த முடியும் என ஹோண்டா நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மரக்குகைப் பாதை




இப்படத்தில் நீங்கள் காண்பது வட அயர்லாந்திலுள்ள ஆர்மாய் பகுதியில் இருக்கும் டார்க் ஹெட்ஜஸ் (Dark Hedges) எனும் சாலையாகும். இந்த சாலையின் இரு புறமும் அழகாக வளைந்த, அடர்ந்த மரங்கள் வளர்ந்திருக்கும். இதன் மத்தியில் செல்லும்போது குகைக்குள் நடப்பது போன்ற தோர் உணர்வு ஏற்படும். இதனால் இந்த இடத்தை 'மரக்குகை பாதை' என அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் சிம்மாசனம்





இலங்கை இராச்சியம் ஆங்கிலேயரின் முழுமையான ஆளுகையின் கீழ் வருவதற்கு முன் கண்டி இராச்சியத்தை ஆண்ட இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆவார். இவர் பயன்படுத்திய சிம்மாசனம், வெற்றிவாள், உறைப்பட்டி மற்றும் கிரீடம் என்பன இன்றும் தேசிய அரும்பொருட்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பிரித்தானியர்களால் கண்டி யுத்தத்தின் இறுதியில் இவர் தோற்கடிக்கப்பட்டு பதவியில் இருந்து நீக்கப்பட்டார். கண்ணுச்சாமி எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் 18 ஆவது வயதில் 1798 இல் சிம்மாசனம் ஏறும்போது தனது அபிஷேகத்திற்காக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எனும் பெயரை தெரிவுசெய்தார். அது மட்டுமன்றி, இலங்கையின் நாயக்கர் அரச வம்சத்தின் இறுதி மன்னர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மன்னன் தனது அரச ஆபரணங்களையும் வேறு பல பெறுமதி மிக்க பொருட்களையும் தனக்கு மிக நெருக்கமான சிலரிடம் மறைத்து வைத்துப் பாதுகாக்கும்படி கையளித்திருந்தார். அதனை தொடர்ந்து சில தினங்களில் மத்திய கண்டியின் போமுரே எனும் இடத்தில் மன்னன் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டார். அதன்பின் மன்னனால் மறைத்து வைக்கப்பட்ட அரச பொருட்களை ஆங்கிலேயருக்கு ஒத்துழைப்பு வழங்கிய எஹலப் பொல எனும் பிரதானியால் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட மன்னனின் சகல பொருட்களையும் பிரித்தானிய மாமன்னனுக்கு அனுப்புவதற்கு ஆங்கிலேய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.


இதன்படி சேர்.ரொபர்ட் பிரவுன்ரிக் என்பவரால் இங்கிலாந்திற்குக் கொண்டு சென்று நான்காம் ஜோர்ஜ் மன்னரிடம் சமர்ப்பித்ததோடு, வின்ட்சர் மாளிகையில் அரச ஆயுதக் களஞ்சியத்தில் இவை வைக்கப்பட்டது. அதன்பின் 1820 ஜுன் 13 ஆம் திகதி லண்டன் நகரின் கொவென்ட் கார்டின் எனும் பிரதேசத்தின் ஓரிடத்தில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மன்னனின் அரச ஆபரணங்களும் கிரீடமும் ஏலத்தில் விடப்பட்டன.

அப் பொருட்களை வெவ்வேறாக்கி துண்டு துண்டாகப் பிரித்து தங்கம், இரத்தினம் என வேறுபடுத்தி அவுண்ஸ் நிறைக்கு விலை மதிப்பீடு செய்து, ஏலத்தில் விற்பதற்கு திட்டமிடப்பட்டது. இதன்போது கிரீடம் மாத்திரம் ஏதோ ஒரு காரணத்திற்காக பிரிக்கப்படுவது தவிர்க்கப்பட்டது. 1815 இல் எடுத்துச் செல்லப்பட்டு க்லொஸ்டர்ஷயர் ஆளுனரின் பொறுப்பில் இருந்த கண்டி அரச லட்சனைகள் அனைத்தும் 1934 இல் மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. அவைகளே இன்று கொழும்பு அரும்பொருட்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

(அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

### கொ/ கைரியா முஸ்லிம் பெண்கள் கல்லூரி



**பெயர்:** அம்னா நஸ்மீர்.
**புள்ளிகள்:** 128.



**பெயர்:** ஆதிகா பன்சஜாயா.
**புள்ளிகள்:** 127.



**பெயர்:** சாஜிதா இம்தியாஸ்.
**புள்ளிகள்:** 108.



**பெயர்:** ஹாஜரா ரஸ்மி.
**புள்ளிகள்:** 103.




**பெயர்:** ரீமா ரபீக்.
**புள்ளிகள்:** 89.



**பெயர்:** ஞஹா பயாஸ்.
**புள்ளிகள்:** 81.



**பெயர்:** பாத்திமா பஸ்ஹா.
**புள்ளிகள்:** 72.



**பெயர்:** நஸ்ஹத் நவ்ஸர்.
**புள்ளிகள்:** 71.

## மாம்பழம்



- மாம்பழம், முக்கனிகளில் ஒன்றாகும்.
- உலகில் வாழும் மக்களில் அதிகமானோர் விரும்பி உண்ணும் பழம்.
- மாம்பழத்தில் விற்றமின் A, விற்றமின் C என்பன அதிகளவில் அடங்கியுள்ளன. தவிர, மேலும் பல ஊட்டச்சத்துக்களும் உள்ளன.
- இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் தேசிய பழமாகவும் மாம்பழம் திகழ்கின்றது.
- மாம்பழத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. ஒவ்வொரு வகையும் வடிவம், நிறம், சுவை என வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருக்கும்.
- மாம்பழம் சாப்பிடுவதால் நினைவாற்றல் மற்றும் பார்வைப் புலன் அதிகரிப்பு, குருதி சுத்திகரிப்பு,புற்றுநோய் தடுக்கப்படல் போன்ற பல்வேறு நலன்கள் கிடைக்கும்.




உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏவரேனும் ஒருவர் உங்களை அடிமையாக வழிநடத்தினால், உங்கள் வாழ்க்கை என்னவாகும்? அவ்வாறான நிலையில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உங்களால் எதனையும் செய்ய முடியாதிருக்கும். கல்வி கற்கவோ, உங்கள் கருத்தை வெளிப்படுத்தவோ, நீங்கள் விரும்பும் கொள்கையை பின்பற்றவோ, நீதி நியாயங்களுக்காக பேசுவதற்கோ எந்தவொரு வாய்ப்பும் இல்லாது போய்விடும். உங்களை வழிநடத்துபவரின் விருப்பப்படியே முழு வாழ்க்கையையும் கழிக்க வேண்டி வரும். இத்தகையதொரு நிலை உங்களுக்கு பெரும் அசௌகரியத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும். எனினும், மனித வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இத்தகைய நிலைமைகளை சட்டதிட்டங்களின்மூலம் நிறுத்திக்கொள்ள மனித உரிமைகளின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆக, உலகில் மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கும் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கைகொடுக்கும் மனித உரிமைகள் குறித்து இங்கு நோக்குவோம்.





# நாம் சுதந்திரமாக வாழ உ

# மனி

## மனித உரிமைகள் என்பது...

மனிதனொருவன் மனிதனாக வாழ்வதற்கு இருக்கும் உரிமைகளே மனித உரிமைகள் ஆகும் என நாம் இலகுவாக வரைவிலக்கணப் படுத்தலாம்.

## மனித உரிமைகளின் தோற்றம்

முற்காலத்தில் உலகின் சகல மனிதர்களுக்கும் சமத்துவமான உரிமைகள் இருக்கவில்லை. செல்வந்தக் குழுவினரே உரிமைகளையும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்தனர். தமது அதிகாரத்தை உச்சமாகப் பயன்படுத்திய செல்வந்தர்கள், ஏழைகளை அடிமைகளாக வழிநடத்தி ஆட்சி செலுத்தி வந்தனர். நவீன அரசியல் எண்ணக்கரு உதயமானதையடுத்து, மனித உரிமைகள் குறித்த எண்ணக்கருவும் தோன்றியது. ஆரம்பத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. பின்னர், பொது மனித சுபாவம் குறித்த எண்ணக்கரு தோன்றியது. அதன்மூலம் மனிதனின் பொருளாதார, அரசியல், சமூக, சிவில் மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்து உரிமைகளும் மனித உரிமைகளாக வரைவிலக்கணப் படுத்தப்பட்டன.

1945 இல் மனித உரிமைகள் குறித்த உலக பிரகடனம் வெளியிடப்பட்டது. அது மனித வரலாற்றில் மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது. இதற்காக ஐக்கிய நாடுகள் சபை பெரும் பங்களிப்பைச் செய்தது. மனித உரிமைகள் குறித்த உலகப் பிரகடனம் உருவாவதற்கு ஏராளமான ஒப்பந்தங்களும் புரட்சிகளும் போராட்டங்களும் பின்புலமாக இருந்தன.

## மனித உரிமைகள் உலக பிரகடனம் (Universal Declarction of Human Rights - UDHR)

மனித உரிமைகள் குறித்து இதுவரை உலகில் உருவான பிரகடனங்களில் இதுவே மிக முக்கியமானதாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் நிகழ்ந்த மனிதப் பேரழிவுகள் மீண்டும் நடைபெறாமல் இருக்க உலக மக்களை ஒன்றிணைத்த சந்தர்ப்பமாக இப்பிரகடனத்தை கருதலாம். 1948 டிசம்பர் 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இப்பிரகடனத்தில், 30 பிரிவுகள் அடங்கி உள்ளன. மனிதனொருவனுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து உரிமைகளும் அதில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றளவில் உலகின் 191 நாடுகள் இப்பிரகடனத்தை ஏற்று அதன்படி செயலாற்றுகின்றன.

## மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் ஏனைய உடன்படிக்கைகள்

★ **பொருளாதார, கலாசார உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கை (ICESCR)**

இது 1996 இல் ஆரம்பமானது. சுதந்திரமாக தொழில் ஒன்றை தெரிவுசெய்யும் உரிமை, உரிய சம்பளத்தைப் பெறும் உரிமை, அமைப்பாக ஒன்றுகூடும் உரிமை என்பன இந்த உடன்படிக்கையின் மூலம் உலகம் முழுவதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

★ **சிவில் மற்றும் அரசியல் உரிமை குறித்த சர்வதேச உடன்படிக்கை (ICCPR)**

சிவில் பிரஜை ஒருவரை கொடுமைப் படுத்துதல், தாழ்வாக நடாத்துதல், பாரபட்சம் காட்டல் போன்ற நிலைகளில் இருந்து விடுதலை அளித்தல் அல்லது மீட்டெடுத்தல், கருத்துக்களை வெளிப்படுத்தல் மற்றும் பின்பற்றுவதற்கு இருக்கும் உரிமைகள், அரசியல் உரிமைகள் போன்ற ஏராளமான விடயங்கள் இதில் அடங்குகின்றன.

★ **சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த முதலாவது நெறிமுறை**

ஒரு நாட்டில் நீதிமன்றத்தினூடாக வழங்கப்படும் இறுதித் தீர்ப்பு குறித்து திருப்தி அடையாதவிடத்து, அங்கத்துவ நாடுகளின் பிரஜைகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவிற்கு முறைப்பாடு செய்யும் வாய்ப்பு இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையும் 1997 ஆம் ஆண்டு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

★ **சிவில் மற்றும் அரசியல் உரிமை குறித்த இரண்டாவது நெறிமுறை**

மரண தண்டனையை நீக்குவதற்கு இணங்கிய நாடுகள் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்த நெறிமுறையினூடாக உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ **பெண்களுக்கெதிரான அனைத்து விதமான பாரபட்சங்களை ஒழிக்கும் உடன்படிக்கை**

1979 இல் உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் 1981 செப்டெம்பர் 03 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

★ ம
ம
த
ப
த
எ
CAT
உடன்
தப்பட
★ சி
உ
சிறு
பாதுக
வரை
நாட்டி
அதிக
நிறுவ
டல் மூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# ...னித உரிமைகள்

உடன்படிக்கை 1989 முதல் நடைமுறையில் உள்ளது.

## மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனங்கள்

மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வலய நிறுவனங்கள் பலவும் உள்ளன.

## மனித உரிமைகள் குறித்த சர்வதேச நிறுவனங்கள்

- ★ மனித உரிமைகள் ஆணைக்குழு.
- ★ ஐக்கிய நாடுகள் போர்க் குற்றவியல் தீர்ப்புச் சபை.
- ★ சர்வதேச சட்ட ஆணைக்குழு.
- ★ சர்வதேச சட்ட வல்லுனர்கள் ஆணைக்குழு.

## மனித உரிமைகள் தொடர்பான பிராந்திய அமைப்புகள்

- ★ மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய நீதிமன்றம்.
- ★ மனித மற்றும் தனிநபர் உரிமைகளுக்கான ஆபிரிக்க ஆணைக்குழு.

## மனித உரிமைகளுக்கான அரச சார்பற்ற அமைப்புகள்

- ★ Human Rights Watch
- ★ Freedom அமைப்பு
- ★ Amnesty International
- ★ Baharain Centre for Human Rights

## இலங்கையில் உள்ள மனித உரிமைகள் பாதுகாப்பு நிறுவனங்கள்

- ★ உயர் நீதிமன்றம்
- ★ மனித உரிமைகள் ஆணைக்குழு
- ★ மனித உரிமைகள் நிறுவனம்
- ★ மனித உரிமைகள் மதிப்பீட்டு மையம்
- ★ மனித உரிமைகளுக்கான சட்டநிபுணர்கள் நிறுவனம்

## மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்

இன்று உலகில் மனித உரிமைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சமூகத்தின் சகல துறைகளையும் மையப்படுத்தி மனித உரிமைகள் வளர்ச்சியடைவதைக் காணலாம். எனினும், தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வேகமாக வளர்ச்சி அடைவதால், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் பல்வேறு சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

**-இரஞ்சித் ஜெயகர்**

**★ மனிதவதை மற்றும் வேறு மனிதத்தன்மையற்ற தண்டனைகளுக்கும் பாரபட்சமான தண்டனைகளுக்கும் எதிரான உடன்படிக்கை**

CAT என இந்த உடன்படிக்கை அர்த்தப்படுத்தப்படுகின்றது.

**★ சிறுவர் உரிமைகள் குறித்த உடன்படிக்கை (CRC)**

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே இது வரையப்பட்டுள்ளது. எமது நாட்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையொன்று நிறுவப்பட்டதும் இந்த வழிகாட்டல் மூலமே ஆகும். இந்த

- ★ வியன்னா மாநாடு மற்றும் உலக மனித உரிமைகள் குறித்த மாநாட்டில் உருவாக்கப்பட்ட செயல்திட்டங்கள்.
- ★ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பதவி.
- ★ சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC)
- ★ சர்வதேச நீதிமன்றம் (ICJ)
- ★ இஸ்லாமியர்களின் மனித உரிமைகளுக்கான 'கெய்ரோ மாநாடு' (கெய்ரோ உடன்படிக்கை)
- ★ மனித உரிமைகளுக்கான அமெரிக்க நீதிமன்றம்.
- ★ நிர்வாக செயற்பாடுகளுக்கான நாடாளுமன்ற ஆணையாளர்
- ★ சட்ட உதவி நிதியம்
- ★ சட்ட உதவி ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் ஆரோக்கியம் என்பது, நாம் உட்கொள்ளும் உணவுகளிலேயே தங்கியுள்ளது. இதனை நன்கு அறிந்திருந்த நம் முன்னோர்கள், தமது உணவில் அதிக கவனம் செலுத்தினர். கிழங்கு வகைகள், தானிய வகைகள், கீரை வகைகள், மரக்கறி-பழவகைகள் போன்ற போஷாக்கு நிறைந்த உணவுகளை அவர்களின் உணவு வேளைகளில் தவறாமல் சேர்த்துக்கொண்டனர். அதனால், அவர்கள் மிகவும் ஆரோக்கியமானவர்களாக-அதிக ஆயுளுடன் வாழ்ந்தனர். எனவே, எமது உடல் ஆரோக்கியத்தில் பிரதான பங்கு வகிக்கும் போஷாக்கு நிறைந்த உணவு வகைகள் பற்றி இங்கு ஆராய்ந்தறிவோம்.




# போஷாக்கு நிறைந்த உணவுகளை உட்கொள்வோம்

கோவா



மீன்கள்

## தவிடுள்ள அரிசி

தவிடுள்ள அரிசியில் நீரில் கரையாத பல தாதுக்கள் அடங்கியுள்ளன. இந்த தாதுக்கள் குடல் சம்பந்தப்பட்ட புற்றுநோய் ஏற்படுவதைக் குறைப்பதற்கு உதவுகின்றதாகக் கூறப்படுகின்றது. இதில் அடங்கியுள்ள ஸ்டனோல் மற்றும் ஸ்டெரோல் போன்ற பதார்த்தங்கள் எமது குடல்களில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கின்றன. அத்துடன், தவிடுள்ள அரிசி வகைகளில் நோய்களை எதிர்க்கும் ஆற்றலும் உள்ளது. எனவே,தவிடுள்ள அரிசிச் சோற்றை உண்பது உடலுக்கு ஆரோக்கியமானதாகும்.



கடலை

## மீன் வகைகள்

மீன்களில் விற்றமின்கள், புரதம், கனியுப்புக்கள் மற்றும் உடலுக்குத் தேவையான கொழுப்புச் சத்து என்பன அடங்கியுள்ளன. மீன்களில் அடங்கியுள்ள ஒமேகா - 3 வகை கொழுப்பு அமிலமானது, நோய்களுக்குள்ளாகும் ஆபத்துக்களைக் குறைக்கின்றது. இதயத் துடிப்பை சீராக்குகின்றது. புற்று நோய் ஏற்படும் ஆபத்துக்களை குறைக்கின்றது.

வளர்ந்துவரும் பிள்ளைகள் குறைந்த பட்சம் வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு தடவைகளேனும் நாளொன்றுக்கு 100 கிராம் மீனையாவது உணவில்சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன், சிறிய மீன்களை உணவில் அதிகம் சேர்த்துக்கொண்டால் அதிக சத்தும் கிடைக்கும்.



தக்காளி

## தானியங்களும் பருப்பு வகைகளும்

எமது நாட்டுக்கே உரிய விதை வகைகள், தானியங்கள், பருப்பு வகைகள் ஏராளம் உள்ளன. பாசிப்பயறு, கடலை வகைகள், கௌபி, சோயா அவரை, சோளம் போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும். இவை மிகச் சிறந்த மருத்துவக் குணம் கொண்டவை.

## தக்காளி

தக்காளி உடலுக்கு மிகவும் தேவையானதோர் உணவாகும். புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய சில அடிப்படைக் காரணிகளை செயலிழக்கச் செய்யும் ஆற்றல் தக்காளிக்கு உண்டு. மேலும், தக்காளியில் விற்றமின் C அதிகம் அடங்கியுள்ளது. தக்காளியை பச்சையாக உட்கொண்டால் கிடைக்கும் நலன்கள் ஏராளம்.

## கோவா

கோவாவில் புற்றுநோயை ஒழிக்கும் க்ளுகோசினோலேட்ஸ் எனும் ரசாயனம் அடங்கியுள்ளது. கோவா குடும்பத்தைச் சேர்ந்த பூகோவா, இலைகோவா போன்றவற்றையும் உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## மரக்கறிகள்

உணவுக்காக மரக்கறிகளை தெரிவுசெய்யும்போது அதன் மருத்துவக் குணங்களை கவனத்தில்கொள்வது போன்றே, அதன் நிறங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். செந்நிறம், மஞ்சள், பச்சை, ஊதா, செம்மஞ்சள் போன்ற பல்வேறு நிறங்களைக் கொண்ட மரக்கறி வகைகளை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள். இந்த நிறங்களிலான மரக்கறிகளில் உடலுக்கு தேவையான அனைத்து போஷாக்குகளும் அடங்கி இருப்பதோடு, நோய்களில் இருந்து எம்மைக் காக்கும் ரசாயனப் பதார்த்தங்களும் அடங்கியுள்ளன.



முட்டை



பயறு



சோயா அவரை

## முட்டை

புரதங்கள் நிறைந்த போஷாக்குமிக்க ஓர் உணவாக முட்டையைக் குறிப்பிடலாம். மனிதனுக்கு நாளொன்றுக்குத் தேவையான அனைத்து கொழுப்பு அமிலங்களும் முட்டையில் அடங்கியுள்ளன. எனவே, ஒரு வாரத்தில் சில தினங்களிலாவது முட்டைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முட்டை மஞ்சள் கருவில் அடங்கியுள்ள கொழுப்பு அமிலமானது, எமது உடலுக்கு அத்தியாவசியமானதாகும். மஞ்சள் கருவில் அடங்கியுள்ள ரசாயனங்கள் மூளை வளர்ச்சிக்கும் கண்பார்வையை சிறப்பாகப் பேணவும் உதவும்.

(-ஜெ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பச்சை நத்தை



★ உயிரியல் பெயர்: **Beddomea albizonata/** *Beddomea albizonatus*

★ ஆங்கிலப் பெயர்: **Sri lanka Green snail**

நில நத்தை இனங்களில் தாழ்நாட்டு ஈரவலயக் காட்டுப் பகுதிகளில் காணக்கூடிய இலங்கைக்கே உரித்தான நத்தை இனம் இதுவாகும். பெரும்பாலும் தாவரங்கள்மீதும் ஈரலிப்பான கற்கள்மீதும் இதனை காணலாம்.

சுற்றாடல் உலர்வாகக் காணப்படும்போது தன் ஓட்டினுள் தற்காலிகமாக வசிக்கும். இது அழியும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ள நத்தை இனம் என்பதால், பாதுகாக்கப்பட வேண்டிய நத்தை இனமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



# எமது முன்னோர்களின் உணவுப் பழக்கங்கள்




எமது முன்னோர்கள் சுற்றாடலுடன் பிணைந்த இயற்கையான வாழ்க்கை முறையினையே வாழ்ந்து வந்தனர். அவர்களின் அடிப்படை தேவைகளாக இருந்த மருந்து வகைகள், உணவு-பானங்கள், ஆடை அணிகலன்கள், கட்டட நிர்மாணங்கள் அனைத்தும் சுற்றாடலை சார்ந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுற்றாடலில் இயற்கையாக விளைந்த மற்றும் இயற்கை விவசாய முறையில் பயிரிடப்பட்ட காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என்பனவற்றையே அவர்கள் உட்கொண்டனர். அத்துடன், பசும்பாலையே அவர்கள் அருந்தி வந்தனர்.

மூன்று வேளைகளும் சோறு உண்பதை தவிர்த்து, பலதரப்பட்ட உணவு வகைகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டினர். தமது ஆரோக்கியத்திற்கு உகந்த உணவுகளையே அவர்கள் எப்பொழுதும் உட்கொண்டனர். ஒரு வாய் சோறு, ஒரு வாய் இலை உணவு, ஒரு வாய் கீரை உணவு, ஒரு வாய் பால் உணவு என்று அவர்கள் கட்டுப்பாட்டுடன் ஆகாரங்களை உட்கொண்டனர். இதனால், நோய்களிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்புக் கிட்டியது. பண்டைய காலத்தில் ஒவ்வொரு நோயிலிருந்து தப்புவதற்கும் ஒவ்வோர் உணவு இருந்தது. அதன் அடிப்படையிலேயே உணவுகள் தயாரிக்கப்பட்டன.

கஞ்சி வகைகளில் அதிக போஷாக்கு சத்துக்கள் நிரம்பியுள்ளதோடு, அவை எளிதில் சமிபாடு அடையும் தன்மையும் கொண்டவையாகும்.

எனவே, அவற்றை தினமும் அருந்தும் வழக்கம் எமது முன்னோர்களிடம் இருந்தது. இதனால், அவர்கள் பலம் வாய்ந்தவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் இருந்தனர். அவர்களின் பார்வைத் திறனும் சிறந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், கீரை வகைகளை தயாரிக்கும்போது, அவற்றுடன் பலா விதை, முந்திரிப் பருப்பு, கடலை என ஏதேனுமொன்றைக் கலந்தே தயாரித்தனர். காய்கறிகள், இறைச்சி, மீன் வகைகளை சமைக்கும்போது, அவற்றில் உள்ள போஷாக்குப் பதார்த்தங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பல நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. உடல் உஷ்ணத்தை அதிகரிக்கும் மீன் வகைகள் தேங்காய் கலந்து சமைக்கப்பட்டன. கொழுப்பு அதிகம் உள்ள இறைச்சி வகைகளை உட்கொண்ட பின்பு பால் கலந்த உணவுகளை தவிர்ப்பதற்கு அவர்கள் பழகியிருந்தனர். எனவே, எமது முன்னோர்களின் உணவுப் பழக்கவழக்கங்களை நாமும் பின்பற்றி வந்தால், நோய்களைத் தவிர்த்து வாழ முடியும்.



# சிவனொளிபாத மலைப் பகுதியில் குப்பைகள் போடுவதைத் தவிர்ப்போம்

சிவனொளிபாத மலை என்பது, இலங்கையில் பெரும்பாலானோர் யாத்திரை செல்லும் ஓர் இடமாகும். சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டு அங்கு செல்பவர்களும் உள்ளனர். இவ்வாறு அங்கு செல்பவர்களினால், சிவனொளிபாத மலைப் பகுதியில் அதிகளவில் குப்பைகள் சேர்வதாகவும், இதனால் அந்த சுற்றாடல் மாசடைதலுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலித்தீன் பைகள், எஞ்சிய உணவுகள், பல்வேறுபட்ட ப்ளாஸ்டிக் பொருட்கள், டொஃபி தாள்கள், ப்ளாஸ்டிக் போத்தல்கள் போன்றவை அங்கு குப்பைகளாக குவிந்து வருவதனால்,





சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனால், அப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசுதல், சுத்தம் மற்றும் அழகு பாதிக்கப்படல் போன்ற நெருக்கடிகள் எதிர்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே, அங்கு போகும்போது எடுத்துச் செல்லும் பொருட்களை பயன்படுத்திய பின்னர் உரிய முறையில் அப்புறப்படுத்துதல் வேண்டும். இதனை அங்கு செல்லும் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் அந்த சுற்றாடல் நமக்கு சாதகமானதாகவும் மீண்டும் அங்கு செல்லக்கூடியதாகவும் அமையும்.

noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் மாலா-ராணி ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මාලා: එන්න රාණි.. මොකද මේ පැත්තේ?
என்ன ராணி.. மொகத மே பெத்தே?
**மாலா: வாருங்கள் ராணி.. என்ன இந்தப் பக்கம்?**

රාණි: මට හරි කම්මැලියි වගේ. ඉතින් මම ආවා.
மட்ட ஹரி கம்மெலிய் வகே. இதின் மம ஆவா.
**ராணி: எனக்கு மிகவும் சோம்பலாக இருந்தது. அதனால் நான் வந்தேன்.**

මාලා: ඒක හොඳයි. මමත් හරි කම්මැලි කමින් හිටියේ.
ஏக்க ஹொந்தய். மமத் ஹரி கம்மெலி கமின் ஹிட்டியே.
மாலா: அது நல்லது. நானும் மிகவும் சோம்பல்தனத்துடனேயே இருந்தேன்.

රාණි: ඔයාලගේ අක්කා දැන් මොකද කරන්නේ?
ஒயாலகே அக்கா தென் மொகத கறன்னே?
**ராணி: உங்களுடைய அக்கா இப்போது என்ன செய்கிறார்?**

මාලා: එයා දැන් පරිගණක පන්තියකට යනවා.
எயா தென் பரிகணக்க பந்தியகட்ட யனவா.
**மாலா: அவர் இப்போது கணினி வகுப்புபொன்றுக்குப் போகிறார்.**

රාණි: අපි දෙන්නත් O/L ඉවර වෙලා පරිගණක පන්තියකට යමු.
அப்பி தென்னத் O/L இவர வெலா பரிகணக்க பந்தியகட்ட யமு.
**ராணி: நாம் இருவரும் O/L முடிந்தபின்னர் கணினி வகுப்பொன்றுக்குப் போவோம்.**

මාලා: ඔව් යමු. ඉංග්‍රීසි පන්තියකටත් යන්න ඕනේ.
ஒவ் யமு. இங்க்றீசி பந்தியகட்டத் யன்ன ஒனே.
**மாலா: ஆம் போவோம். ஆங்கில வகுப்புக்கும் போக வேண்டும்.**

ඔයා දැන් විභාගෙට ලැහැස්තිද?
ஒயா தென் விபாகெட்ட லெஹெஸ்தித?
**நீங்கள் இப்போது பரீட்சைக்கு ஆயத்தமா?**

රාණි: ටික ටික පාඩම් කරනවා.
டிக்க டிக்க பாடம் கறனவா.
**ராணி: கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கிறேன்.**

මාලා: විභාගේ ළං වෙලා අපි දෙන්නා එකතු වෙලා පාඩම් කරමු.
விபாகே லங் வெலா அப்பி தென்னா எக்கத்து வெலா பாடம் கறமு.
**மாலா: பரீட்சை நெருங்கும் போது நாம் இருவரும் சேர்ந்து படிப்போம்.**

රාණි: හොඳයි මාලා.
ஹொந்தய் மாலா.
**ராணி: நல்லது மாலா.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ................ හරි කම්මැලියි.
2. පරිගණක ................ යනවා.
3. .................... ලැහැස්තිද?




## எதிர்கால வாக்கியம்
## Future tense

**'Will'** எனும் எதிர்கால துணை வினைச்சொல்லை, ஏதாவதொரு மூல வினைச்சொல் (Stem Verb) சகிதம் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியத்தையும், 'going to' எனும் வினைச்சொல் சகிதம் ஏதாவதொரு மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியத்தையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) He will eat bread for dinner.
அவன் இரவுணவாகப் பாண் சாப்பிடுவான்.

ஆ) He is going to eat bread for dinner.
அவன் இரவுணவாகப் பாண் சாப்பிடப் போகின்றான்.

★ He will eat.
அவன் சாப்பிடுவான்.

★ He is going to eat.
அவன் சாப்பிடப் போகின்றான்.

இ) She will travel to Kandy by train.
அவள் கண்டிக்கு ரயில் மூலம் பயணிப்பாள்.

ஈ) She is going to travel to Kandy by train.
அவள் கண்டிக்கு ரயில் மூலம் பயணிக்கப் போகின்றாள்.

★ She will travel.
அவள் பயணிப்பாள்.

★ She is going to travel.
அவள் பயணிக்கப் போகின்றாள்.

உ) It will jump into the well.
அது கிணற்றுக்குள் பாயும்.

ஊ) It is going to jump into the well.
அது கிணற்றுக்குள் பாயப் போகின்றது.

★ It will jump.
அது பாயும்.

★ It is going to jump.
அது பாயப் போகின்றது.

★ **மேலும் சில உதாரணங்கள் பின்வருமாறு**

அ) Rahul will do his work tomorrow.
ராஹுல் தனது வேலையை நாளை செய்வான்.

ஆ) Rahul is going to do his work tomorrow.
ராஹுல் தனது வேலையை நாளை செய்யப் போகின்றான்.

★ Rahul will do.
ராஹுல் செய்வான்.

★ Rahul is going to do.
ராஹுல் செய்யப் போகின்றான்.

இ) Bawani will drink coffee.
பவானி கோப்பி குடிப்பாள்.

ஈ) Bawani is going to drink coffee.
பவானி கோப்பி குடிக்கப் போகின்றாள்.

★ Bawani will drink.
பவானி குடிப்பாள்.

★ Bawani is going to drink.
பவானி குடிக்கப் போகின்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண T20 போட்டிகள் ஆரம்பம்







ஆசிய கிண்ண T20 கிரிக்கெட் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் (எமிரேட்ஸ்) ஆகிய நாடுகள் இப்போட்டியில் மோதுகின்றன. லீக் அடிப்படையில் நடைபெறும் இப்போட்டிகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் இரண்டு அணிகளும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

13 ஆவது தடவையாக நடைபெறுகின்ற ஆசிய கிண்ணப் போட்டிகளில் இத்துடன் பங்களாதேஷ் 5 ஆவது தடவையாக ஆசிய கிண்ணப் போட்டிகளை நடத்துகின்றமை குறிப்பிடத் தக்கது. ஆசிய வலயத்திற்குள் அடங்குகின்ற நாடுகளுள் கிரிக்கெட் போட்டிகளில் ஈடுபடுகின்ற நாடுகள் மத்தியில் நட்புறவைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே 1983ஆம் ஆண்டில் ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் ஏற்படுத் தப்பட்டதுடன், அதன் பிரதிபலனாக 1984 ஆம் ஆண்டில் முதலாவது ஆசிய கிண்ணப் போட்டிகள் நடைபெற்றன.

இருப்பினும் அரசியல் காரணங்களால் 1986 இல் நடைபெற்ற ஆசிய கிண்ணப் போட்டிகளில் இந்தியா கலந்து கொள்ளவில்லை.

அதேபோல் 1990/91 போட்டிகளை பாகிஸ்தானும் பகிஷ்கரித்தது. மேலும் 1993 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த ஆசிய கிண்ணப் போட்டிகள் கைவிடப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

முதலாவது ஆசிய கிண் ணத்தை இந்தியா கைப்பற் றியிருந்ததுடன், இதுவரை மொத்தமாக நடைபெற்றுள்ள 12 ஆசிய கிண்ணப் போட்டி களில் இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலா 5 போட்டிகளில் செம்பியன் கிண ணத்தைக் கைப்பற்றியுள்ளன. பாகிஸ்தான் 2 தடவைகள் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. மார்ச் 8 ஆம் திக்தி உலகக் கிண்ண T20 போட்டிகள் ஆரம்ப மாகவுள்ளதால் ஆசிய கிண்ணப் போட்டியின்பால் அனைவரது கவனமும் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில், உலகக்

கிண்ணத்தில் போட்டியிட வுள்ள இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் ஆசிய கிண்ணப் போட்டியில் கலந்துகொள்கின்றமையேயா கும். இந்த அணிகளின் பலம், பலவீனம் ஆகியவற்றை இனங்கண்டுகொள்வதற்கு மேற்படி ஆசிய கிண்ணப் போட்டிகள் வாய்ப்பாக அமையும் என்றும் கருதப்படுகின்றது.

# கென்யா திருந்தாவிட்டால் ஒலிம்பிக்கை இழக்கக்கூடும்






உலக போதைப்பொருள் பாவனை தடுப்பு ஏஜென்சியின் நியமங்களுக்கு ஏற்ப செயற் படாவிட்டால் கென்யாவிற்கு இம்முறை ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப் படும் என்று சர்வ தேச மெய் வல்லுனர் சங்கத்தின் தலைவர் செபஸ்தியன் கோ எச்ச ரிக்கை செய்துள்ளார்.

கடந்த வருடம் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் 40 தங்கப் பதக்கங்களை வெற்றியீட்டிய கென்யா தாமே மெய்வல்லுனர் போட்டிகளில் ஜாம்பவான்கள் என்று பறைசாற்றியிருந்தனர். ஆயினும், உண்மை நிலைவரம் என்னவென்றால், கடந்த மூன்று வருடங்களுள் கென்ய போட்டியாளர்கள் 40 பேர் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனையில் ஈடுபட்டமையினால் சர்வ தேச மெய்வல்லுனர் போட்டித் தடைக்கு ஆளாகியிருந்தமை சுட்டி க்காட்டத்தக்கது.

எனவே, நியமங்களுக்கு ஏற்ப கென்யா அனுகூலமாக நடந்துகொள்ளாவிட்டால் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட நிலமையே கென்யாவிற்கும் ஏற்படும் என்றும் செபஸ்தியன் கோ மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒலிம்பிக்கில் இலங்கை சார்பாக 10 பேர் கலந்து கொள்வர்...?

பிரேஸில் ரியேடி ஜெனிரோ நகரில் ஓகஸ்ட் 5 ஆம் திகதி 31 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்ப மாகின்றன. இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இலங்கை சார்பாக 10 போட் டியாளர்களை இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி தெரிவுசெய்துள்ளது.

ஏற்கனவே, மெய்வல்லுனர் போட்டிகளுக்கென மூன்றுபேர் இப்போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளதுடன் அண்மை யில் நடந்து முடிந்த 'சார்க்' போட்டிகளில் நீச்சல் போட்டிகளில் 12 தங்க நாணயங்களை வென்றெடுத்த மெத்யூ அபேசிங்ஹ மற்றும் திமிக்கோ ரஹீவ் ஆகிய இரண்டு பேருக்கும் 'வைல் கார்ட்' முறையில் ஒலிம்பிக் கில் நீச்சல் போட்டி களில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்க லாம் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதிவரை போட்டியாளர்களுக்கான வாய்ப்பினை பெறுவதற்கான கால அவகாசம் இருப்பதாக இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவித்துள்ளார். மேலும் பளுதூக்குதல், ஜூடோ, பெட்மின்டன், மல்யுத்தம், குறி பார்த்துச் சுடுதல் போன்ற இன்னும் பல போட்டிகளில் கலந்து கொள்ளுவதற்கு 'வைல் கார்ட்' முறையில் வாய்ப்புக் கள் இருப்பதாகவும் மெக்ஸ் வெல் குறிப்பிட்டுள்ளார்.




இதுகாலவரை நடை பெற்றுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக இரண்டே இரண்டு பதக்கங்கள் மட்டுமே வெல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஜய் சாரணர் உலகம்

# யாழில் இனிதே நிறைவுற்ற 9 ஆவது சாரணர் ஜம்போரி



இலங்கை தேசிய சாரணர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 9 ஆவது சாரணர் ஜம்போரி பெப்ரவரி 20 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இனிதே நடைபெற்று நிறைவடைந்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற சாரணர் ஜம்போரிக்கு இலங்கை பூராகவும் இருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சாரணர்களும், 200 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு சாரணர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி சாரணர் ஜம்போரிக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் வட மாகாண முதலமைச்சர் பி.வி. விக்னேஸ்வரன், கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோரும் கலந்துகொண்டனர். ஜம்போரியில் இடம்பெற்ற சில நிகழ்வுகளை இங்குள்ள படங்களில் காணலாம்.
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளிகளின் வழியே இணைத்தால், எத்தனை சதுரங்களைப் பெறலாம்?






படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை மேலிருந்து கீழ்நோக்கி உரிய கட்டங்களில் எழுதிய பின்னர், செந்நிறக்கட்டங்களுக்குள் வரும் புதிய சொல்லைக் குறிப்பிடுக




★ புதிய சொல் [ ][ ][ ][ ]

## குறுக்கெழுத்துப் போட்டி: 177

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | |
| | 3 | ■ | | ■ | ■ |
| | ■ | 4 | | | 5 |
| 6 | | | ■ | ■ | |
| | | | 7 | ■ | |
| ■ | 8 | ■ | | | 9 |

### மேலிருந்து கீழ்

01. (இவனுக்கு) புல்லும் ஆயுதம்.
02. சிறிய மலை. (குழம்பியுள்ளது)
03. யானை. (தலைகீழ்)
04. 'பாராட்டத்தக்கது' என்பதைக் குறிக்கும் ஒரு சொல். (குழம்பியுள்ளது)
05. எட்டுக்கால் பூச்சி.
07. உணவு வகையொன்று.
08. கேணி. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. உடம்பில் கறுப்பு - வெள்ளை கோடுகள் உள்ள மிருகம்.
03. கற்கள்- ஒருமை. (மாறியுள்ளது)
04. செடியின் மேல் காய். காயின் மேல் செடி.
06. ஏழ்மை.
07. சூரியன். (மாறியுள்ளது)
09. மேட்டு நிலப்பகுதி. (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 176 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | டி | தா | ங் | 2 கி | ■ |
| 3 ம | 4 து | ■ | ■ | ள் | ■ |
| ய | ■ | 5 தா | ■ | ளை | 6 கா |
| 7 ம | 8 சூ | ர | ம் | ■ | ற் |
| லை | யி | கை | 9 பு | ■ | றா |
| ■ | று | ■ | 10 க | ர | டி |

## இடைவெளிகளை நிரப்புக




### போக்குவரத்து சாதனங்களைப் பொருத்தமான பெயர்களுடன் இணைக்க




○ Tractor


○ Truck

○ Yacht

○ Train

## அறிவுக்கு விருந்து (17.02.2016) விடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

பேறகஸ்வத்தை, வெளிமடையைச் சேர்ந்த றபைதீன்-றிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ரீமா, தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 01.03.2016 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.


(தகவல்: எச்.றஹுமான்)




2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பிரான்ஸ் நாட்டின் சென் மாண்டே மாநகரத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 'இலங்கையின் எதிர்காலத்திற்கு ஒரு புன்னகை' எனும் அமைப்பு, மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு பல்வேறுபட்ட கல்விசார் உதவிகளை வழங்கி வந்தது. மேற்படி திட்டத்தின் நிறைவாக, அந்த அமைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் ஃபோட்டோ பிரதி இயந்திரமொன்றை கல்லூரி அதிபர் அருட்சகோதரி அருள் மரியாவிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளில் சிலரையும் படங்களில் காணலாம். (தகவல்: பழலுல்லாஹ் பர்ஹான்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு


த.விதுர்ஷன், பழைய ஊர், மன்னம்பிட்டி.


எஃப்.சுஹானா, பதுரியா மத்திய கல்., மாவனல்லை.



ஜெ.தசானா, மு/உடையார்கட்டு ம.வித்., புதுக்குடியிருப்பு.


ஜீ.சதீஸ்வரன், விக்னேஸ்வரா ம.வித்., திருகோணமலை.

ஜெ.சபீனா, அல்-அஸ்ஹர் மத்திய கல்., திஹாரி.


ஜி.புஷானி மதுஷங்கரி, ஹி/தல்லை தமிழ் வித்., இரத்தினபுரி.



எஸ். அனுதர்ஷினி, மமா/ஹய்பொரஸ்ட் இல-03 த.வித்தியாலயம்



# அனுபவ அறிவு



முதியவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் கருத்துக்கள் பிரச்சினைக்குரிய நேரங்களில் வேதவாக்காகவே அமைந்து விடுவதுண்டு. ஏனெனில், வாழ்வில் பல இன்னல்களையும் கஷ்டங்களையும் எமக்கு முன்னரே கடந்து வந்தவர்கள் அவர்கள்.





அவர்களிடையே காணப்படும் அனுபவ அறிவானது, எமது வாழ்வில் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. ஆசிரியர்களின் அனுபவ அறிவானது, மாணவர்களிடையே சிறந்த பெறுபேறுகளை தோற்றுவித்துவிடுகின்றது. அவ்வாறே, பெற்றோர்களின் அனுபவ அறிவானது பிள்ளைகளிடையே நற்பழக்கங்களை புகுத்தக் காரணமாகிவிடுகின்றது.

அந்தவகையில், கல்வி அறிவுடன்கூடிய அனுபவ அறிவு, மிக மிகப் பெறுமதியானதாகவே கருதப்படுகின்றது. வாழ்வியலில் பல்வேறுபட்ட நவீன அறிவியல் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாம், முதியவர்கள் மற்றும் அனுபவஸ்தர்களின் அனுபவ அறிவினையும் அவர்களின் வழிகாட்டல்களையும் உதாசீனம் செய்யாதிருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.


த.அபிஷா, நெளுக்குளம் கலைமகள் ம.வித்., வவுனியா.


த.யோகேஷ், தி/இ.கி.ச.ஹீ.கோணேஸ்வர இந். கல்., திருகோணமலை.


ச.வசந்தன், ஹோல்புறூக் விஞ்ஞான கல்., அக்கரப்பத்தனை.

noolaham.org | aavanaham.org



சுமார் ஆயிரம் அடி அகலம் கொண்ட விண்கல் ஒன்று எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி பூமிக்கு அருகாமையில் பயணிக்கவுள்ளது. இந்த விண்கல்லிற்கு நாஸா விஞ்ஞானிகள் 2013 டிஎக்ஸ் 68 என்று பெயரிட்டுள்ளனர். இந்த விண்கல் பூமியிலிருந்து 14 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் பயணிக்கும் என்று நாஸா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

# பூமிக்கு அருகாமையில் பயணிக்கும் விண்கல்

## அச்சம் வேண்டாம்

இவ் விண்கல் பூமியுடன் மோதுவதற்கு வாய்ப்பில்லை அது பற்றி அஞ்சத் தேவையில்லை என்று நாஸா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## 2013 டிஎக்ஸ் 68


இந்த விண்கல் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் பூமிக்கு அருகாமையில் பயணித்த போதே இனம் காணப்பட்டது. இதனால்தான் 2013 டிஎக்ஸ் 68 என்று இதற்கு பெயரிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி நாஸா நிறுவனத்தின் ஆய்வகத்தால் முதலில் இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் 2017 இல்

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 28 ஆம் திகதி இந்த விண்கல் மீண்டும் பூமிக்கு அருகாமையில் வரவுள்ளது. அப்பொழுது அது பூமியுடன் மோதுவதற்கான வாய்ப்புகள் உள்ளதென நாஸா விஞ்ஞானிகள் தெளிவு படுத்துகின்றனர். அதன் பின்பு 2046, 2097 ஆகிய ஆண்டுகளில் இந்த விண்கல் பூமிக்கு அருகாமையில் வரும் என கருதப்படுகின்றது.

## உலக முடிவு

விண்கல் மோதல் காரணமாக, உலக முடிவு நிகழும் என்று எதிர்வுகூறல்கள் கூறப் பட்டுள்ளது. உலக முடிவு 2032 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26இல் நிகழும் என்று உக்ரேனின் வானியல் பௌதீகவியல் கண்காணிப்பு மையத்தின் விஞ்ஞானிகள் உறுதிபட தெரிவித்துள்ளார்கள். இதன்படி, பூமியை மோதவுள்ள விண்கல்லின் பயணப் பாதையினைக் கணிக்கும் போதே 2032 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இவ் விண்கல் பூமியுடன் மோதும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.



## டைனோசர்கள் அழிவு

விண்கல் பூமியுடன் மோதும் போது பாரிய வெடிப்பொன்று ஏற்படும். இந்த வெடிப்பின் போது கதிர்வீச்சு நிகழும். இதனால், பூமியின் வளிமண்டலம் நச்சு வாயுக்களினால் நிரம்பிவிடும். சூரிய ஒளி பூமிக்கு வராது. பெரிய உயிர் சேதம் ஏற்படும். இது போன்றுதான் சுமார் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்த டைனோசர்கள் அழிந்துள்ளன.

## பாதுகாப்பு வலையமைப்பு

பூமிக்கு ஆபத்தினை விளைவிக்கக்கூடிய விண்கற்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இதன்படி விண்கல்லின் மோதலில் இருந்து உலகினைப் பாதுகாப்பதற்கு புதிய பாதுகாப்பு வலைய மைப்பு ஒன்றினை ஆரம்பித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

---

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்ப்டும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கில கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

17.02.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:
ஹரி பொட்டர்
Pendrive வெற்றியாளர்:
கே.ஷண்முகி,
67, செட்டி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்


அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(02.03.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
02.03.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# விஞ்ஞானத்தின் விந்தைகள்

நாம் அருந்தும் பால் மா எவ்வாறு செய்யப்படுகின்றது என்பது பற்றி பார்க்கப் போகின்றோம். அத்துடன், நாம் நீராவியாதலையும் சேர்ந்தே கற்கப் போகிறோம்.

0 செல்சியஸ் பாகை மற்றும் 100 இற்கு இடையில் எந்தவொரு வெப்பநிலையிலும் நீர் ஆவியாகக்கூடும். ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு விதத்தில் நீர் ஆவியாகின்றது. இதன்போது அது காற்றாக மாறுகின்றது.

இந்த நீரினை காற்றாக மாற்றுவதற்கு அனல் சக்தி அவசியமாகின்றது.





இதனாலேயே துரிதமாக ஏதேனும் ஒரு பொருளை உலரச் செய்ய வேண்டுமாயின் நீங்கள் அனல் சக்தியினைப் பயன்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி, சிறிய இடத்தினை விட பெரிய இடப்பரப்பில் நீர் வேகமாக ஆவியாகின்றது. இதனால், ஈரலிப்பான பொருட்களைப் பெரிய இடப் பரப்பில் விரித்து வைக்கும்போது அது விரைவாக உலர்வடை கின்றது.


இவ்வாறே, மற்றொரு வழி முறையும் உள்ளது. அதுவே காற்றலைகளை செலுத்தும் முறையாகும். இதன்போது ஒரு பொருளின்மீது காற்றுப் பயணிப்பதன் மூலம் இதன் ஈரலிப்பு மிகவும் விரைவாக உலர்கின்றது. அந்தவகையில், அதிக வெப்பநிலை, பெரும் இடப்பரப்பு மற்றும் காற்றலை வீச்சு என்பன உலர்வினை துரிதப்படுத்துகின்றது.

## பால் மா தயாரிக்கும் முறை

அதிக வெப்பநிலை, பெரும் இடப்பரப்பு மற்றும் காற்று ஆகியவற்றைக் கொண்டு சாதாரண பாலின் நீரினை ஆவியாக்குவதன் மூலம் பால் மா தயாரிக்கப்படுகின்றது. பால் மா 'ஸ்பிரே டிரயர்' மூலம் தயாரிக்கப்படுகின்றது. இதன்போது பால் சிறிய துளிகளாக விசிறப்படுகின்றது. சிறிய துளிகளை டிரயர்க்குள் உட்செலுத்தும்போது அதிலுள்ள வெப்பமான காற்று பால் துளிகளிலுள்ள நீரினை விரைவாக அப்புறப்படுத்துகின்றது. இதன்போது டிரயரின் கீழ் பால்மா சேர்கின்றது.

## உங்களுக்கு தெரியுமா?

பாலில் நூற்றுக்கு 87 சதவீதம் நீர் காணப்படுகின்றது. இதனை உலர்த்துவதன்மூலம் பாலினை நீண்ட காலம் வைத்திருக்க முடியும். ஏனெனில், ஆகாரத்தினை பழுதுபடுத்தும் பக்டீரியாக்களினால் நீரின்றி வளர்ச்சியடைய முடியாது.





# கம்போடியா

தென்கிழக்கு ஆசியாவின் சீன குடாநாட்டிற்கு தெற்கே அமைந்துள்ள கம்போடியா கி.பி. 1863 ஆம் ஆண்டில் பிரான்சியரால் ஆக்கிரமிக்கப்பட்டது. அதன்பின் 1953 இல் கம்போடியா பிரான்சிடமிருந்து முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. அதனை தொடர்ந்து அங்கு செயல்பட்ட கம்யூனிச ஆதரவு கெமரூக் இயக்கமானது 1975 இல் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த கிளர்ச்சியின்போது அந்நாட்டு மக்கள் 15 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.



சீயம் மக்கள் முதல் குடிகளாவர்.

## தேசிய மிருகம், பறவை, மலர்



தேசிய மிருகம் - கௌயுபி என அழைக்கப்படும் எருமை
தேசிய பறவை - ஜயன்ட் இபிஸ் எனும் நீர்ப்பறவை
தேசிய மலர் - மஞ்சள் அல்லி

## இனங்கள்




## மொழிகள்

பேமர் 96.7%
ஏனையோர் 3.7%

## சமயம்

தேரவாத பௌத்தம் 96.9%
இஸ்லாம் 1.9%,
கிறிஸ்தவம் 0.4%
ஏனையோர் 0.8%

## அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்



பிரதமர் - ஹன் சென்



சர்வாதிகாரியான பொல்பெட் காலத்தில் பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டனர்.



கி.பி. 802 முதல் 1431 வரை நீடித்த பேமர் பேரரசுக்குரிய பிரதேசமாக இருந்தது.



நாணயம் - கம்போடிய ரியல்.




கம்போடிய தேசிய கொடி

## இயற்கை வளம்

எண்ணெய் மற்றும் இயற்கை வாயு, இரத்தினம், இரும்பு, மெங்கனீஸ், பொஸ்பெட்.



இரத்தினக் கற்களுக்கு பகழ்பெற்ற நாடு.



கம்போடியாவுக்குரிய கடல்வலயத்தில் அமைந்துள்ள எண்ணெய் படிவு.



பாரம்பரிய உடை.



மீக்கொங்நதி பாய்கின்றது.



நொரோடொம் சிகாமெனி அரசராக இருக்கிறார்.



பாரம்பரிய நடனம்.




1953 இல் கம்போடிய மக்கள் சுதந்திரம் பெற்றனர்.



பனம் பாகினால் தயாரிக்கப்படும் தின்பண்டங்கள் புகழ்பெற்றுள்ளது.

## தலைநகரமும் பெரிய நகரமும்





யுத்தங்களினால் மக்கள் அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.



தேரவாத பௌத்தம் பின்பற்றப் படுகின்றது.

பௌத்த மத வழிபாட்டுத் தலம்.



நெற்பயிர்ச்செய்கை பிரதான வருமானத்துறையாகும்.



மீன்பிடிக் கைத்தொழிலை இங்கு காணலாம்.



இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.



அங்கோர்வட் நகரிலுள்ள தொல் புதைமங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இடம்பெயரும் பிரச்சினைகளால் அமைக்கப்பட்டுள்ள

# மதில்களும் வேலிகளும்

உலகெங்கிலும் உள்ள மக்கள் நாளுக்கு நாள் பல்வேறுபட்ட பிரிவினைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். அதன் விளைவாக, தமது நாட்டினை எல்லைகளால் அடையாளப்படுத்துகின்றனர். இதற்கு உதாரணமாக ஜெர்மனியின் பேர்ளின் நகரில் அமைக்கப்பட்ட பேர்ளின் சுவரினைக் குறிப்பிட முடியும். எனினும், சுவர்மூலம் பிரித்து வேறாக்கப்பட்டதை நிராகரித்த ஜேர்மனி மக்கள் பேர்ளின் சுவரை இடித்துத் தரைமட்டமாக்கினர்; இந்நிகழ்வு நடந்து தற்போது 25 வருடங்களாகிவிட்டன.

எனினும், உலக மக்கள் இன்றும் தமது எல்லைகளைப் பிரித்த வண்ணமே உள்ளனர். அத்தகைய ஓர் உண்மைச் சம்பவம்தான் டியூனீசியாவுக்கும் லிபியாவுக்கும் இடையில் உருவாக்கப்பட்ட எல்லையாகும். நாடுகளின் பாதுகாப்புக் கருதியே இவ்வாறு சுவர்கள் எழுப்பப்படுகின்றன. அத்தோடு, உலக மக்களில் சிலர் பல்வேறுபட்ட பிரச்சினைகளால் இடம்பெயரும் காரணத்தினால் சுவர்கள் அமைக்கப்படுவது துரிதமாக்கப்படுகின்றது. இதன்படி இன்றுவரை உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் தமது தேச எல்லைகளை வேறுபடுத்திக் கட்டிய மற்றும் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ள மதில் சுவர்களில் 10 மதில் சுவர்களையும் வேலிகளையும் பற்றி இங்கு நோக்குவோம்.


**அமெரிக்க-மெக்ஸிக்கோ வேலி**
மெக்ஸிகோ மக்கள் அமெரிக்காவிற்கு இடம்பெயர்வதையும் போதைப் பொருட்கள் கடத்துவதை ஒழிப்பதற்கும் இந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது.






**ஸ்பெயின்- மொரோக்கோ வேலி**
மொரோக்கோவில் அமைந்துள்ள ஸ்பெயினுக்குரிய செயுட்டு மற்றும் மெலில்லா ஆகிய மாநிலங்களை சுற்றி இந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது.

**பெல்ஃபாஸ்ட் சமாதான மதில்**
வட அயர்லாந்திலுள்ள இந்த சுவர் 1969 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.






**சைப்பிரஸ் வேலி**
1974 இல் துருக்கியால் இது கட்டப்பட்டது.

**ஹங்கேரிக்கும் சேர்பியாவுக்கும் இடையில் உள்ள வேலி**
ஹங்கேரியாவால் கட்டப்பட்ட இந்த வேலியின் நீளம் 110 மைல்களாகும்.








**கிரேக்க துருக்கி வேலி**
கிரேக்கத்திற்கும் துருக்கிக்கும் இடையில் கட்டப்பட்டுள்ள இந்த 7 மைல் நீளமான வேலியின் மூலம் ஐரோப்பாவுக்குள் சட்டவிரோத இடப்பெயர்வுகள் தடுக்கப்படுகின்றது.


**மொரோக்கோவுக்கும் மேற்கு சஹாராவுக்கும் இடையில் உள்ள வேலி**
மணலால் அமைக்கப்பட்டுள்ள இந்த வேலியின் நீளம் 2,700 கிலோ மீற்றராகும். பொலிசாரியோ போராளிகளின் ஊடுருவலைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.





**சவூதி மற்றும் ஈராக் இடையிலான வேலி**
ஈராக்கிலிருந்து பயங்கரவாத நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு சவூதி அரேபியாவால் 560 மைல் தூரத்திற்கு வேலி அமைக்கப்பட்டது.

**மேற்கு முனை மதில்**
இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையில் கட்டப்பட்ட இந்த சுவரானது, பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.






**இந்தியா-பங்களாதேஷ் வேலி**
பங்களாதேஷ் எல்லையில் இந்தியாவால் அமைக்கப்பட்ட இந்த முட்கம்பி வேலியால் பங்களாதேஷ் மக்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்வது தவிர்க்கப்பட்டுள்ளது.



**புகழ்பெற்ற மதில் சுவர்**

**ஜேர்மனியின் பெர்ளின் மதில் சுவர்**
ஜேர்மனியை மேற்காகவும் கிழக்காகவும் வேறுபடுத்தி 1961 இல் கட்டப்பட்ட பேர்ளின் சுவரானது, உலகின் மிக முக்கியமான புகழ்பெற்ற மதில் சுவராக கருதப்படுகின்றது. அச்சுவர் 1992 ஆம் ஆண்டு முற்றாக இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.




1992 ஆம் ஆண்டளவில் உலகெங்கும் கட்டப்பட்டிருந்த எல்லைச் சுவர்களின் எண்ணிக்கை **16**

தற்போதைய உலகில் பல்வேறு நாடுகளில் தமது எல்லைகளில் கட்டப்பட்ட மதில் சுவர்களின் எண்ணிக்கை **65**

**அண்மைய பிரிப்பு**

**டியூனிசியா மற்றும் லிபியாவுக்கு இடையில்**
லிபியாவுடனான தமது தேச எல்லையை வரையறுக்க டியூனிசியா அண்மையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் விளைவாக, 200 கிலோ மீற்றர் நீளம் கொண்ட மதில் சுவர் எழுப்பப்பட்டது.




Digitized by Noolaham Foundation.

யாழ்ப்பாண பொது நூலகம்



# பாலங்களின் நகரம்





**உ**லகின் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களில் ஒன்றுதான் இத்தாலியின் வெனிஸ் நகரம். சுமார் *118* குட்டித் தீவுகளை உள்ளடக்கியிருக்கும் இந்த நகரை ஊடறுத்து நூற்றுக்கணக்கான கால்வாய்கள் ஓடுகின்றன. இந்த கால்வாய்களைக் கடந்து செல்வதற்கென அந்த நகரெங்கும் 400 இற்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இதனால், வெனிஸ் நகரம் 'பாலங்களின் நகரம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது.

# பெறுமதி வாய்ந்த மரம்








**பெ**றுமதி வாய்ந்த மர வகைகளில் தேக்கு மரமும் ஒன்றாகும். ஆங்கிலத்தில் Teak என அழைக்கப்படும் இதன் தாவரவியல் பெயர் '*Tectona grandis*' என்பதாகும். நல்ல வலிமையுடைய இந்த மரத்தை கரையான்கள் தாக்குவதில்லை. அதனால்தான், 'மரவேலை செய்பவர்களுக்கு உகந்த பிரமாதமான மரம்' என்று தேக்கு மரம் சிறப்பிக்கப்படுகின்றது. தளபாட உற்பத்தி, கட்டட நிர்மாணங்கள் மற்றும் கப்பல் தளம் கட்டுதல் போன்றவற்றுக்காக இந்த மரப் பலகை பயன்படுத்தப்படுகின்றது. தேக்கு மரப் பலகையினால் உற்பத்தி செய்யப்படும் தளபாடங்களின் விலையும் அதிகமாகும்.

# பண்டைய கால திசைகாட்டிகள்





**பு**வியின் காந்த முனைகளுக்கு சார்பாக திசையைக் காட்டும் ஒரு திசைகாண் உபகரணமே 'திசைகாட்டி' (Compass) ஆகும். திசைகாட்டி கண்டறியப்படாத காலத்தில் பறவைகள், திமிங்கிலங்கள், நட்சத்திரங்கள், வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே, கடற்பயணங்கள் மற்றும் தரைவழிப் பயணங்களின் போது திசைகள் அறிந்துகொள்ளப் பட்டன.

# இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, மார்ச் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 02, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org